# මාධ්‍ය සංකථන
# மாந்ய சங்கதன
# MAADHYA SANKATHANA

අභිමංගල කලාපය | அங்குரார்ப்பண வலாகம | Inaugural Issue

ජනාධිපති මාධ්‍ය සම්මාන 2018
ஜனாதிபதி ஊடக விருது 2018
PRESIDENTIAL MEDIA AWARDS 2018

# මාධ්‍ය සංකථන

## ශාස්ත්‍රීය සංග්‍රහ වාර්ෂිකය

## අභිමංගල කලාපය


***සංස්කරණය***

සෙනේෂ් දිසානායක බණ්ඩාර

***සහය සංස්කරණය***

නිමල් ඒකනායක

***භාෂා සංස්කරණය***

තිලකරත්න කුරුවිට බණ්ඩාර
ආචාර්ය එස්. රඝුරාම්
එම්. ජේ. ආර්. ඩේවිඩ්



***ප්‍රකාශනය***

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
163, ඇසිදිසි මැදුර, කිරුළපන මාවත,
පොල්හේන්ගොඩ,
කොළඹ 05.

# මාධ්‍ය සංකථන

## ශාස්ත්‍රීය සංග්‍රහ වාර්ෂිකය
## අභිමංගල කලාපය


වෙළුම 01, නිකුතුව 01
ප්‍රථම මුද්‍රණය - 2019 අප්‍රේල්
ISSN 2673-1452



**සංස්කාරක මණ්ඩලය**

දිසානායක බණ්ඩාර, සෙනේෂ්
ඒකනායක, නිමල්
කුරුවිට බණ්ඩාර, තිලකරත්න
රගුරාම්, එස්.
ඩේවිඩ්, එම්. ජේ. ආර්.



**ප්‍රකාශනය**

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
163, ඇසිදිසි මැදුර, කිරුළපන මාවත,
පොල්හේන්ගොඩ,
කොළඹ 05.

**කවරය නිර්මාණය සහ පිටු සැලසුම්**

සෙනේෂ් දිසානායක බණ්ඩාර
චතුර ධනවර්ධන

**දෙමළ පරිවර්තන**

ඒ. එච්. එම්. යාසීන්

**සංස්කරණ සහාය**

ධම්මික තිලකරත්න
නිශාන් ධම්මික


මෙම ලිපි සමුච්චයෙහි අන්තර්ගත ලිපිවල එන අදහස් ඒ ඒ ලේඛකයින් සතුය.
තවද මෙහි අක්ෂර වින්‍යාස යොදා ඇත්තේ ද ඔවුන්ගේ පිළිගත් සම්ප්‍රදාය ගුරු කොට ගෙනය.
ඒ පිළිබඳව සංස්කාරකවරුන්ගේ හෝ ප්‍රකාශකයන්ගේ හෝ කිසිදු වගකීමක් නොමැති බව
කරුණාවෙන් සළකන්න.

# மாந்ய சங்கதன

கல்வி சார் ஆய்விதழ்
அங்குரார்ப்பண வெளியீடு


***ஆசிரியர்***

செனஸ் திசாநாயக்க பண்டார

***உதவிப் பதிப்பாசிரியர்***

நிமல் ஏக்கநாயக்க

***மொழி ஆசிரியர்கள்***

திலகரத்ன குருவிதா பண்டார
கலாநிதி எஸ். ரகுராம்
எம்.ஜே.ஆர் டேவிட்



***பதிப்பகத்தார்***

வெகுசன ஊடக அமைச்சு
இல. 163, அசிதிசி மெந்துர,
கிருளப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொட, கொழும்பு 05.

# மாத்திய சங்கதன

## வருடாந்த கல்விசார் ஆய்விதழ்
## தொடக்க இதழ்

தொகுதி 01, வெளியீடு 01,
முதல் பதிப்பு - 2019 ஏப்ரல்
ISSN 2673-1452

**பதிப்பாசிரியர் குழு**

திஸாநாயக்க பண்டார, செனஸ்
ஏக்கநாயக்க, நிமல்
குருவிட்ட பண்டார, திலகரத்ன
ரகுராம், எஸ்.
டேவிட், எம்.ஜே.ஆர்.

**வெளியீடு**
வெகுசன ஊடக அமைச்சு
163, எசிதிசி மெதுர, கிருளபன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 05.

**அட்டைப்பட வடிவமைப்பு மற்றும் பக்க ஒழுங்கமைப்பு**
செனட் திஸாநாயக்க பண்டார
சதுர தனவர்தன

**தமிழ் மொழிபெயர்ப்பு**
ஏ.எச்.எம்.யாஸீன்

**பதிப்புக்கான உதவி**
தம்மிக திலகரத்ன
நிஷான் தம்மிக

இங்குள்ள கட்டுரைகளின் உள்ளடக்கங்களிலுள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்பானவர்கள். அத்தோடு இங்கு எழுத்து வடிவங்கள் அவர்கள் ஏற்றுக்கொண்ட முறைக்கேற்ப இடப்பட்டுள்ளது. அது தொடர்பில் பதிப்பாசிரியர்களுக்கோ அல்லது வெளியீட்டாளர்களுக்கோ எந்தவித பொறுப்பும் கிடையாது என்பதை கவனத்திற்கொள்க

# MAADHYA SANKATHANA

ANNUAL ACADEMIC JOURNAL
INAUGURAL ISSUE

*EDITOR*
Senesh Dissanaike Bandara

*ASSOCIATE EDITOR*
Nimal Ekanayake

*LANGUAGE EDITORS*
Thilakarathne Kuruwita Bandara
Dr. S. Ragurām
M.J.R. David

*PUBLISHER*
Ministry of Mass Media
163, Asi Disi Madura,
Kirulapona Mawatha,
Polhengoda, Colombo 05

# MAADHYA SANKATHANA

## ANNUAL ACADEMIC JOURNAL
## INAUGURAL ISSUE

Volume 01, Issue 01
First Published – April 2019
ISSN 2673-1452

***EDITORIAL BOARD***
Dissanaike Bandara, Senesh
Ekanayake, Nimal
Kuruwita Bandara, Thilakarathne
Raguram, S.
David, M.J.R.

***PUBLICATION OF***
Ministry of Mass Media
163, Asi Disi Madura, Kirulapona Mawatha,
Polhengoda, Colombo 05

***COVER DESIGN AND PAGE DESIGNS***
Senesh Dissanayake Bandara
Chathura Dhanawardena

***TAMIL TRANSLATIONS***
A.H.M. Yaseen

***EDITING ASSISTANCE***
Dhammika Thilakaratne
Nishan Dhammika

The views expressed in published articles are those of the authors and the spellings are also used by the accepted traditions. The contents in the articles are not necessarily those of the editorial committee, or the Ministry of Mass Media

**උපදේශකත්වය**

රුවන් විජයවර්ධන

ගරු ජනමාධ්‍ය අමාත්‍ය හා ගරු ආරක්ෂක රාජ්‍ය අමාත්‍ය

**අධීක්ෂණය**

සුනිල් සමරවීර

ලේකම්

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

රමණී ගුණවර්ධන

අතිරේක ලේකම්

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

ජේ.ඩබ්ලිව්.එස්. කිත්සිරි

අධ්‍යක්ෂ (සංවර්ධන)

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

කේ.පී. ජයන්ත

අධ්‍යක්ෂ (මාධ්‍ය)

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

සුධර්මා කරුණාරත්න

සහකාර ලේකම් (සංවර්ධන)

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

යුරේකා වේලාරත්න

නීති නිලධාරී

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

**සම්බන්ධීකරණය**

මාණ්ඩලික නිලධාරීන් ප්‍රමුඛ සියලුම කාර්ය මණ්ඩලය

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

ජනමාධ්‍ය අමාත්‍යාංශය විසින් සංවිධානය කළ,
2019 අප්‍රේල් මස 10 වෙනි දින බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාවේ දී පැවැත්වුණු,
2018 ජනාධිපති මාධ්‍ය සම්මාන උළෙලට සමගාමීව පළකෙරිණි

**ஆலோசனை**

ருவன் விஜயவர்தன

கௌரவ வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**மேற்பார்வை**

சுனில் சமரவீர
செயலாளர்
வெகுசன ஊடக அமைச்சு

ரமணி குணவர்தன
மேலதிக செயலாளர்
வெகுசன ஊடக அமைச்சு

ஜே.டபிள்யு.எஸ்.கித்சிறி
பணிப்பாளர் (அபிவிருத்தி)
வெகுசன ஊடக அமைச்சு

கே.பி.ஜயந்த
பணிப்பாளர் (ஊடகம்)
வெகுசன ஊடக அமைச்சு

சுதர்மா கருணாரத்ன
உதவிச் செயலாளர் (அபிவிருத்தி)
வெகுசன ஊடக அமைச்சு

யுரேகா வேலாரத்ன
சட்ட உத்தியோகத்தர்
வெகுசன ஊடக அமைச்சு

**ஒருங்கிணைப்பு**

பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட
அனைத்து உத்தியோகத்தர்களும்

வெகுசன ஊடக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2019 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 2018 ஜனாதிபதி ஊடக விருது விழாவுக்கு இணைவாக வெளியிடப்பட்டது.

CONSULTANCY

Ruwan Wijewardene

Hon. Minister of Mass Media and the Hon. Minister of Defense

SUPERVISION

Sunil Samaraweera

Secretary

Ministry of Mass Media

Ramani Gunawardena

Additional secretary

Ministry of Mass Media

J. W. S. Kithsiri

Director (Development)

Ministry of Mass Media

K.P. Jayantha

Director (Media)

Ministry of Mass Media

Sudharma Karunaratne

Assistant Secretary (Development)

Ministry of Mass Media

Yureka Velarathna

Legal Officer

Ministry of Mass Media

COORDINATION

Staff Officers with all the staff of

Ministry of Mass Media

Maadya Sankathana was published in parallel with
the Presidential Press Awards 2018, held on 10th April 2019
at the Bandaranaike Memorial International Conference Hall.
Organized by the Ministry of Mass Media.

# පෙරවදන

විශිෂ්ට මාධ්‍ය සංස්කෘතියක් ශ්‍රී ලංකාව තුළ ස්ථාපිත කිරීම උදෙසා මාධ්‍යවේදීන් විසින් සිදු කරනු ලබන මෙහෙවර සහ ඔවුන්ගේ ගුණාත්මක දායකත්වය ඇගයීම සඳහා "ජනාධිපති මාධ්‍ය සම්මාන" උළෙලක් වාර්ෂිකව සංවිධානය කිරීමට ජනමාධ්‍ය අමාත්‍යාංශය උත්සුක වී තිබෙනවා. එහි සමාරම්භක උළෙල පැවැත්වෙන 2019 වසර යනු ඉන් ඉදිරියටත් ජනාධිපති මාධ්‍ය සම්මාන උළෙල මාලාවක් සංවිධානය වීමේ ප්‍රවණතාවක මුල් වසර යි. 2019 වසරේ පැවැත්වෙන ජනාධිපති මාධ්‍ය සම්මාන 2018 තරගාවලිය වෙනුවෙන් 2017 වසරේ දී මුද්‍රිත මාධ්‍ය මගින් පළ වූ, විද්‍යුත් මාධ්‍ය මගින් විකාශය වූ සහ වෙබ් අඩවි මගින් පළ වූ ස්වකීය කෘතීන් ඉදිරිපත් කරන ලද මාධ්‍යවේදීන් සහ මාධ්‍ය ආයතන ඒ අනුව ඇගයීමට පාත්‍රවනවා ඇති.

ඕනෑම ක්ෂේත්‍රයක් උදෙසා පවත්වන සම්මාන ප්‍රදානයක වැදගත්කම මෙන්ම සම්මාන ලැබීමේ වැදගත්කම ප්‍රශස්ත තත්වයකින් පවත්වාගැනීම ඒ ක්ෂේත්‍රයටම පැවරෙන ප්‍රධානතම වගකීම යි. එය මාධ්‍ය ක්ෂේත්‍රයට විශේෂිතවන විට තවත් අභියෝගාත්මක වෙනවා. හේතුව මාධ්‍ය යන්න යම්කිසි අවකාශයක වෙසෙන අසීමිත පොදු ග්‍රාහක පරාසයකට සංවේදීවන්නක් විමයි. එම නිසාම සම්මාන ප්‍රදානයේදී ලබාදුන් තීන්දු පිළිබඳව මෙන්ම සම්මාන ලැබීමෙන් පසු සම්මාන ලාභියා පිළිබඳව පවා අසීමිත පොදු ග්‍රාහක පරාසය සංවේදී වීම බලාපොරොත්තු විය යුතු අභියෝගයක් වෙනවා. ඊට පාදක වන්නේ පවත්නා සමාජ සන්දර්භය තුළ මානව ජීවිතය දරා සිටින සුවිශේෂී ගතිකයක් වශයෙන් මාධ්‍යයේ කාර්යභාරය වන හේතුවයි.

නිතරම නිවැරදි අන්තර්ගතයක්ම මාධ්‍ය සංදේශය තුළින් ග්‍රාහක ජනතාව අතරට ගෙනයාමක් මාධ්‍ය තුළින් මාධ්‍ය ග්‍රාහක පරාසය විසින් පොදු වශයෙන් අපේක්ෂා කරනවා. ඒවා සමාජගත කිරීම මගින් යම්කිසි සමාජ සුබවාදයක් ද ඔවුන් අපේක්ෂා කරනවී වානිජකරණය වූ ජනමාධ්‍ය පරිසරයක් තුළ ඉහත කාර්යයන් පහසුවෙන් ඉටු කරගැනීමට නොහැකිවන පසුබිමක පවා මාධ්‍යවේදීන්ගේ නොපසුබට උත්සාහයන් ගැනත් යම්කිසි දුරකට ඔවුන්ගේ සංවේදීත්වයකුත් තිබෙනවා. ඒ අනුව උද්යෝගීමත් මාධ්‍යවේදියා යනු විශ්වසනීයත්වයක් දරන, අපක්ෂපාතීවන, සෑම විටම සුබවාදී සමාජ ආරක්ෂකයෙකු වශයෙන් ඔවුන්ගෙන් ගෞරවයට පාත්‍ර වෙනවා. ඒ අතරේම මාධ්‍ය ග්‍රාහකයන් වන තමන්ගේ සමාජ කාරණා කෙරෙහි අවධානයක් නොදී මාධ්‍යවේදීන් මාධ්‍ය ආයතනවල න්‍යාය පත්‍ර තුළ කොටුවීම යන්න ඔවුන්ට අනුව මාධ්‍යවේදීත්වයේ සීමාන්තය ලෙස පිළිගැනෙනවා. වර්තමානයේ සම්මාන ප්‍රදානයත් සම්මාන ලැබීමත් වර්තමානය වනවිට අභියෝගාත්මක වන්නේ එවිටයි.

මාධ්‍යවේදීන් මෙන්ම මාධ්‍ය ඇසුරුකරන ග්‍රාහකයන්ද මේ ගත කරන්නේ සියලු ජනමාධ්‍යයන් ඒකරාශීකරණය වී ඒ දෙපාර්ශවයම හසුරුවමින් ඉන්නා වර්තමානයකයි. මෙම තත්වය තවමත් කිසිදු විෂය පථයක් ඔස්සේ ප්‍රමාණාත්මකව ගැඹුරු න්‍යායාත්මක විශ්ලේෂණයකට ලක් නොවී ඇති ක්ෂේත්‍රයක්. නොඑසේනම් මානව දැනුම් පද්ධතිය තුළ එය තවමත් ස්ථාවරව ස්ථානගත නොවීමෙන් තවම සංකල්පනය වන ප්‍රායෝගික තත්වයක්. එම නිසාම මාධ්‍යය පිළිබඳ සංකථන බිහිවීම වැදගත්වන්නේ විශේෂයෙන්ම ව්‍යුහාත්මක වශයෙන් න්‍යායාත්මක සංකල්ප ඔස්සේ බිහි වන නව කතිකාවන් සහ මාධ්‍ය සංස්කෘතික පැතිකඩයන් එකට සම්මුඛ කරවන නිසායි.

ජනාධිපති මාධ්‍ය සම්මාන උළෙලට සමගාමීව ජනමාධ්‍ය අමාත්‍යාංශය මගින් ප්‍රකාශයට පත්කරවන "මාධ්‍ය සංකථන" ශාස්ත්‍රීය සංග්‍රහ වාර්ෂිකය යනු දිවයින පුරා තිබෙන මාධ්‍ය අධ්‍යයනය පිළිබඳව පවතින සෑම ශාස්ත්‍රාලයකටම කරන ලද ආරාධනාවෙන් අනතුරුව ප්‍රතිචාර වශයෙන් ලද ශාස්ත්‍රීය ලිපි සමුච්චයකි. "මාධ්‍ය සංකථන" ශාස්ත්‍රීය සංග්‍රහ වාර්ෂිකය යනු මාධ්‍ය අමාත්‍යාංශයේ හිටපු අතිරේක ලේකම් ජේ. එම්. තිලකා ජයසුන්දර මහත්මියගේ යෝජනාවක්. මාධ්‍ය අමාත්‍යාංශයේ සම්බන්ධීකරණයෙන් ගෙන්වා ගන්නා ලද ලිපි සමුච්චයේ භාෂා සංස්කාරකත්වය සිදුවූයේ තිලකරත්න කුරුවිට බණ්ඩාර, ආචාර්ය එස්. රගුරාම් සහ එම්. ජේ. ආර්. ඩේවිඩ් මහත්වරුන් අතින්. ග්‍රන්ථයේ කවර නිර්මාණයේදී පාදක කරගන්නා ලද මූලික වර්ණ කිහිපය වර්ණ සංවේදී නියාමන වලට අනුව යොදාගත්තක්. ඒවා විශේෂයෙන්ම මාධ්‍ය ග්‍රාහකයා විසින් මාධ්‍යවේදියාගෙන් අපේක්ෂා කරනු ලබන උද්යෝගීමත් බව (රතු), සමාජ සුබවාදී බව (කහ), විශ්වාසනීයත්වය (නිල්) සහ අපක්ෂපාතීබව (අළු) නියෝජනය කරනවා.

"මාධ්‍ය සංකථන" ශාස්ත්‍රීය සංග්‍රහ වාර්ෂිකයේ අභිමංගල කලාපය යනු ජනාධිපති මාධ්‍ය සම්මාන උළෙලට සමාන්තරව ලද මාධ්‍ය විෂය ක්ෂේත්‍රයේ හැදෑරීම්කාරක අවකාශයක මූලාරම්භයක් ලෙස සැළකිය හැකිය.

**සෙනේෂ් දිසානායක බණ්ඩාර** | ප්‍රධාන සංස්කාරක
**සංස්කාරක මණ්ඩලය වෙනුවෙන්**

# முன்னுரை.

சிறந்த ஊடக் கலாசாரமொன்றை இலங்கையில் நிறுவுவதற்காக ஊடகவியலாளர்களினால் ஆற்றப்படும் பணிக்காக அவர்களின் பண்புசார் பங்களிப்பை பாராட்டும் முகமாக "ஜனாதிபதி விருது விழா" ஒன்றை வருடாந்தம் நடாத்துவதற்கு வெகுசன ஊடக அமைச்சு முன்வந்துள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு 2019 ஆம் ஆண்டு நடைபெறுவதோடு அது எதிர்காலத்தில் பல ஜனாதிபதி ஊடக விருது விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுவதற்கான முன்னோடி நிகழ்வாகும். 2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி ஊடக விருது விழாவின் மூலம் 2018 ஆம் ஆண்டு போட்டிகளுக்குரிய 2017 ஆம் ஆண்டு அச்சு ஊடகங்களில் வெளியான, இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக ஒலிபரப்பப்பட்ட மற்றும் இணையத்தளங்களில் பிரசுரிக்கப்பட்ட தமது ஆக்கங்களை சமர்ப்பித்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் பாராட்டுப் பெறவுள்ளன.

எந்தவொரு துறையிலும் நடாத்தப்படும் விருது வழங்கும் விழாவின் முக்கியத்துவம் அதே போன்று விருதுகளைப் பெற்றுக்கொள்ளும் முக்கியத்துவத்தை உயர் தரத்தில் பேணுவது அந்தத் துறைக்கான பொறுப்பாகும். அது ஊடகத் துறையில் மிகவும் சவால்மிக்க முக்கியத்துவம் பெறுகின்றது. காரணம் ஊடகம் என்பது ஏதேனும் வெளியில் வசிக்கும் எல்லையற்ற நேயர்களை சென்றடைவதினாலாகும். எனவே, விருதுகள் வழங்கும் போது வழங்கப்பட்ட முடிவு தொடர்பிலும் விருது பெற்ற பின்னர் விருது பெற்றவர் மீதும் எல்லையற்ற பொது நேயர்களின் கவனம் குவிக்கப்படுவது எதிர்பார்க்கப்படும் சவாலாகும். அதற்கான அடிப்படைக் காரணம் யாதெனில், தற்போதுள்ள சமூக சூழலில் மனித வாழ்வை தாங்கியுள்ள விசேட சக்தியாக ஊடகத்தின் வகிபாகம் காணப்படுவதனாலாகும்.

எப்போதும் சரியான உள்ளடக்கத்தை மாத்திரம் நேயர்களுக்கு கொண்டு செல்லப்படுவதை பொது நேயர் சமூகம் எதிர்பார்க்கின்றது. அவற்றை சமூகமயப்படுத்துவதன் மூலம் சமூகத்தின் நலன் கருத்திற்கொள்ளப்படுகின்றது. வர்த்தகமயமாக்கப்பட்ட ஊடகச் சூழலில் மேற்படி பணிகளை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடியாத பின்னணியிலும் கூட அவர்கள் அதற்காக முயற்சியை எடுக்கின்றனர். அதற்கமைய ஊக்கமுள்ள ஊடகவியலாளர்கள் நம்பிக்கையுள்ள, பக்கச்சார்பற்ற, எந்த நேரத்திலும் சிறந்த சமூகத்தின் காவலானாக அவர்களது கௌரவத்தைப் பெற்றுக்கொள்கின்றார். அத்தோடு, நேயர்களை கருத்திற்கொள்ளாது தனது ஊடக நிறுவனத்திற்குள் சுருங்கிக்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கு அவர்களிடம் மதிப்பில்லை. எனவே தான் விருது வழங்குவதும் விருது பெறுவதும் தற்போது சவாலாக மாறியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களை அணுகும் நேயர்கள் தற்போது அனைத்து ஊடகங்களும் ஒன்றிணைந்து அத்தகைய இரு தரப்பினர்களையும் இயக்கும் சந்தர்ப்பத்தில் வாழ்கின்றனர். இந்த நிலமை இது வரையில் எந்தவொரு விடயப் பரப்பின் கீழும் போதியளவு ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தப்படாத துறையாக காணப்படுகின்றது. இன்றேல், மானிட அறிவுக் கட்டமைப்புக்குள் அது இன்னும் நிலையாக நிலைப்படுத்தப்படாத காரணத்தினால் அது ஒரு செயல்முறை கருத்தியலாக உள்ளது. அதனால் தான் ஊடகம் தொடர்பில் கலந்துரையாடலொன்று அவசியப்படுகின்றது. விசேடமாக கோட்பாட்டு ரீதியில் உருப்பெறும் புதிய கருத்தாடல்கள் மற்றும் ஊடக கலாசாரம் தோற்றுவிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

ஜனாதிபதி ஊடக விருது விழாவுக்கு இணைவாக வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்படும் "ஊடகக் கலந்துரையாடல்" வருடாந்த கல்வி சஞ்சிகை என்பது நாடு பூராகவும் உள்ள ஊடக கற்கைகள் பற்றிய அனைத்து நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்ற கல்விசார் கட்டுரைகளின் தொகுப்பாகும். "ஊடகக் கலந்துரையாடல்" வருடாந்த கல்வி சஞ்சிகை என்பது அமைச்சில் இருந்த முன்னாள் மேலதிக செயலாளர் திருமதி. ஜே.எம்.திலகா ஜயசுந்தர அவர்களின் யோசனையாகும். ஊடக அமைச்சின் ஒருங்கிணைப்புடன் வரவழைக்கப்பட்ட கட்டுரை தொகுப்பின் மொழிப் பதிப்பு திலகரத்ன குருவிட்ட பண்டார, கலாநிதி எஸ்.ரகுராம் மற்றும் திரு. எம்.ஜே.ஆர்.டேவிட் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. நூலை ஆக்கும் போது பயன்படுத்திய அடிப்படை நிறங்கள் கூருணர்வுமிக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவை விசேடமாக ஊடக நேயரினால் ஊடகவியலாளரிடமிருந்து எதிர்பார்க்கும் ஊக்கம் (சிகப்பு), சமூக நல்லெண்ணம் (மஞ்சள்), நம்பிக்கை (நீலம்) மற்றும் பக்கச்சார்பின்மை (கபிலம்) ஆகிய நிறங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

"ஊடகக் கலந்துரையாடல்" வருடாந்த கல்வி சஞ்சிகையின் ஆரம்ப இதழ் ஜனாதிபதி ஊடக விருது விழாவுக்கு இணைவாக வெளியிடப்படும் ஊடகத் துறையில் கற்றலுக்கு சந்தர்ப்பம் வழங்கும் ஆரம்பப் படியாக கருதமுடியும்.

**செனட் திஸாநாயக்க பண்டார** | பிரதம பதிப்பாசிரியர்
பதிப்பாசிரியர் குழு சார்பாக

# PROLOGUE

The Ministry of Mass Media has been endeavoring to organize a "Presidential Media Awards" annually to appraise the quality of the contribution by the media personnel towards the establishment of a distinguished media culture in Sri Lanka. With its inauguration in the year 2019, as the first year in which to organize a series of presidential media awards will be appreciating the journalists and the media institutions which broadcast by electronic media and published in print media and in new media. "Presidential Media Awards -2018" will be appreciating the entries of year 2017.

Initiating a high quality awarding ceremony and the maintaining its excellence by the awardees is even more challenging when it comes to the media field. The reason is that the media is sensitive to an unlimited number of subscribers in a common space. It is because the role of the media is a significant dynamic in human life in the prevailing social context.

There is an expectation among the audience that the media re-provide credible information. The audience is also appreciative of the fact that media personal operate in an environment challenge by commercial interest. Accordingly to above, the media personnel are credible, impartial, and always honored as the contributors to the society. At the same time, it is generally acknowledged that the media personnel are in the agenda settings of their media institutions. But common subscribers think that not paying attention to their social issues, that is the end of journalism. It is how the challenge leads to the awarding and being awarded for the qualities of enthusiasm, social optimism, trust and impartiality.

Media Personnel who are employed in Media as well as media subscribers who associate the Media are now in the phase of manipulative by the politics in Media today. This is a very subject that has not yet been quantified in a deep theoretical analysis through any scope. Or, it is an infamous topic that is conceived by the fact but not yet clarified in the human knowledge system. Therefore, the media discourses are important because the formation of new dialogues on media cultural aspects, especially structurally, have emerged based from concepts from the new pragmatics.

“Maadhya Sankathana”, is an annual publication by the Ministry of Mass Media in parallel to the "Presidential Media Awards", with the responses to the invitation extended by the Ministry to every academy on Media Education throughout the country. The “Maadhya Sankathana” is a proposal by Ms. J. M. Thilaka Jayasundara, the former Additional Secretary of the Ministry of Finance and Mass Media. The language editing of the respective languages are accomplished by Mr. Thilakarathne Kuruwita Bandara, Dr. S. Raguram and Mr. M. J. R. David. The basic color plan used in the book cover is based on Color Emotion Guidelines. They represent the enthusiasm (red), social optimism (yellow), trust (blue) and impartiality (gray) that the media subscribers expect from the media personnel.

The Inaugural Issue of the “Maadhya Sankathana” annually published in the company of the Presidential Media Awards, expects to extend a space for originating a connection of media as a cognitive element in an emerging society.

**Senesh Dissanaike Bandara** | Editor-In-Chief
Representing the Editorial Board

# පටුන - உள்ளடக்கம - TABLE OF CONTENT


| NO: | ARTICLES | PAGE |
|---|---|---|
| | මාධ්‍ය සංකථන සංකල්පීය ප්‍රවේශය<br>එම්. ජේ. ආර්. ඩේවිඩ් | 01 |
| 001. | සන්නිවේදන අවබෝධය : විෂය පථයේ ව්‍යාප්තිය<br>මහාචාර්ය සුනන්ද මහේන්ද්‍ර | 07 |
| 002. | අන්තර් සංස්කෘතික සන්නිවේදන අවබෝධය<br>ආචාර්ය සුගත් මහින්ද සෙනරත් | 11 |
| 003. | තොරතුරු තාක්‍ෂණීකරණය වීම තුළ පරිධියේ රටවල ගොඩනැගෙන මානව දෘෂ්ටිවාදය සහ එහි ස්වරූප<br>ආචාර්ය ධර්මකීර්ති ශ්‍රී රන්ජන් / පවිත්‍රා උමයංගනී | 17 |
| 004. | ගෝලීයකෘත සන්දර්භය තුළ සංහතික මාධ්‍ය සංස්කෘතික භූමිකාව<br>ප්‍රදීපා සංජීවනී දිසානායක | 23 |
| 005. | මාධ්‍ය නිදහස පුළුල් කල තොරතුරු පනතේ ගමන්මග<br>නීතිඥ ජගත් ලියන ආරච්චි | 31 |
| 006. | සන්නිවේදනයේදී සත්‍ය ප්‍රකාශ කිරීම : බෞද්ධ පර්යාලෝකය<br>ආචාර්ය විමල් හේවාමානගේ | 39 |
| 007. | මාක්සියානු මාධ්‍ය සිද්ධාන්ත : කෙටි හැඳින්වීමක්<br>මහාචාර්ය ඩැනියෙල් චැන්ඩ්ලර් පරිවර්තනය : සමන් එම්. කාරියකරවන | 47 |
| 008. | ප්‍රථම සිංහල පුවත්පත නිව්යෝර්ක් යයි<br>මහාචාර්ය රෝහණ ලක්ෂ්මන් පියදාස | 61 |
| 009. | පුවත්පත සහ මානව සංස්කෘතික පැවැත්ම<br>ඩිලන්ත රත්නායක | 67 |
| 010. | අපේ මුල්කාලීන ගුවන්විදුලියේ යටත්විජිත ආකල්පය සහ ජාතික සංවර්ධන වැඩසටහන්<br>මහාචාර්ය සේන නානායක්කාර | 73 |
| 011. | රාජ්‍ය ප්‍රතිපත්තියෙන් බලාත්මක කළ යුතු ප්‍රජා ගුවන්විදුලිය<br>මහාචාර්ය කමල් වලේබොඩ | 81 |
| 012. | ශ්‍රී ලාංකේය ගුවන්විදුලි ගීතයේ ආරම්භය පිළිබඳ විමසුමක්<br>නන්දන මිල්ලගල | 87 |
| 013. | සංජානනය, සන්නිවේදනය හා ශ්‍රව්‍ය කාව්‍යය<br>කැත්ලීන් ජයවර්ධන | 97 |
| 014. | සංගීතය සමාජගත කිරීමෙහිලා ගුවන්විදුලි මාධ්‍යයෙහි දායකත්වය<br>ඉරංගා සමින්දනී වීරක්කොඩි | 103 |
| 015. | ගුවන් විදුලි නාට්‍ය නිෂ්පාදනයේ පරිණාමීය සාධක පිළිබඳ විමර්ශනයක්<br>මනුරි පබසරී මැණිකේ වලේබොඩ | 119 |
| 016. | ටෙලිවිෂන් මාධ්‍යයේ සිට නූතන දෘශ්‍ය මාධ්‍යය තෙක් විමසුමක්<br>ස්ටැන්ලි හෙට්ටිආරච්චි | 129 |
| 017. | ජනමාධ්‍ය වගකීම හා උතුරේ රූපවාහිනී ප්‍රේක්ෂක අපේක්ෂා<br>ටී. එම්. ජී. චන්ද්‍රසේකර | 139 |
| 018. | ශ්‍රී ලාංකේය රූපවාහිනී මාධ්‍යයේ සමාජ වගකීම හා කාර්යභාරය<br>මහාචාර්ය පැට්‍රික් රත්නායක | 145 |
| 019. | ජාලීය සමාජයේ බලපෑම සහ අවකාශීය අනන්‍යතා අර්බුදය<br>විජේසිංහ දිසානායක | 155 |
| 020. | සංඛ්‍යාංක අවකාශය තුළ සමාජ මාධ්‍ය සහ ශාස්ත්‍රාලීය ප්‍රජාව<br>ආචාර්ය වත්සලා අතුකෝරල | 165 |

| NO: | ARTICLES | PAGE |
|---|---|---|


021. අභිසාරිතා මාධ්‍ය, තාක්ෂණික විශේෂතා සහ එහි අභියෝග
එස්. ඒ. නයනා සුරවීර ........ 171

022. ශ්‍රී ලංකාවේ ග්‍රාමීය සමාජ සංස්කෘතික වෙනස්වීම කෙරෙහි මාධ්‍යය අභිසාරිතාවෙහි බලපෑම
කළණි ඉරෝෂා ධර්මසිරි ........ 179

023. සාම්ප්‍රදායික ජනමාධ්‍ය අතික්‍රමණය කරමින් ව්‍යාප්ත ෆේස්බුක් සමාජ ජාලය සහ එහි සමාජීය බලපෑම
ධම්මික තිලකරත්න ........ 189

024. පුරවැසි සන්නිවේදනයේ නව ප්‍රවණතාව : විශ්ව හෘදය සාක්ෂියේ සන්නිවේදනය
අනුරසිරි හෙට්ටිගේ ........ 197

025. සමාජ මාධ්‍ය සහ නිෂ්පාදිත ප්‍රචාරණ උපක්‍රම
සජිතා ලක්මාලි හේවාපතිරණ ........ 205

026. ලාංකික සිනමා සාහිත්‍යයේ සමාරම්භය විමර්ශනයක්
ආචාර්ය උදිත ගයාෂාන් ගුණසේකර ........ 209

027. සිනමා සංඥාර්ථවේදය හා සජීවීකරණයේ ඉතිහාසය
ඩබ්ලිව්. ඩී. එස්. වීරතුංග. ........ 213

028. යහපත් මාධ්‍ය සංස්කෘතියක් උදෙසා ජාතික කතෝලික සිනමා පර්ෂදයේ එදා මෙදා තුර දායකත්වය
ගරු බෙනඩික්ට් ජෝශප් පියතුමා ........ 219

**ஊடக கலந்துரையாடல் எண்ணக்கரு அணுகுமுறை**
எம்.ஜே.ஆர் டேவிட் ........ 229

029. வெகுசன ஊடகச் செல்நெறியும் மாற்று ஊடகத்தின் தேவையும
அனுதர்ஷி லிங்கநாதன் ........ 235

030. மக்களை அணுகுதல் : வெகுசன ஊடகங்களின் நிகழ்ச்சிநிரல் மீதான ஓர் விமர்சனப் பார்வை
கலாநிதி. சி. ரகுராம் ........ 239

031. ஊடகவழி அரசியல் தொடர்பாடல்
சூ. யூட் டினேஸ் கொடுதோர் ........ 245

032. ஊடகங்களும் பால்நிலையும
பூங்குழலி பாலகோபாலன் ........ 251

033. விளையாட்டுத் துறையில் பெண்கள் : தமிழ்ப் பத்திரிகை அறிக்கையிடல்கள் மீதான பார்வை
சிவப்பிரியா ஶ்ரீராம் ........ 255

Maadhya Sankathana : Conceptual Approach
M.J.R. David ........ 259

034. Would Dinosaurs Survive in the Face of Digital Platforms?
Dr. Ranga Kalansooriya ........ 265

035. Communication policy in the age of Facebook: Challenges for South Asia
Prof. Rohan Samarajiva ........ 269

036. Ethics in Digital Media: Significance of implementing Ethics in digital media platform in Sri Lanka
Nimmie Hathiyaldeniya ........ 277

037. Social media voices towards the religious conflicts in Sri Lanka
Dasuni Nayanthara Jayarathne ........ 285

038. The Development Strategies of digital publishing in Penguin Random House
Kumesh Prabhashini Gamage ........ 291

039. The Pulitzer Prize: An awarding platform for media as a constituent to enhance its culture and industry with incentive to excellence
Senesh Dissanaike Bandara ........ 303

- 32 -

# ஊடகங்களும் பால்நிலையும

**பூங்குழலி பாலகோபாலன்,**
விரிவுரையாளர், ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*poongulaly02@gmail.com*

ஆய்வுச் சுருக்கம்

ஊடகங்கள் தற்காலத்தில் பல்வேறு தளங்களில் பல்வேறுதுறையில் பயணித்தாலும் அவற்றின் செயற்பாடுகள் மக்கள் மயப்படுத்தப்படுவது அவசியமான விடயமாகும். பல்வேறு மூலங்களிலிருந்து தகவல்களைச் சேகரித்து அவற்றினை வெவ்வேறு வடிவங்களில் மக்களுக்கு வழங்கும் கருவியாக ஊடகங்கள் அமைகின்றன. அந்தவகையில், ஊடகங்களால் கட்டியெழுப்பப்படும் ஆரோக்கியமானதொரு சூழலே நாட்டினையும் சமூகத்தையும் ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும் என்பது உறுதியானது. மக்களுக்கான கருத்துக்களைத் தோற்றுவிப்பதில் முக்கிய வகிபங்காக விளங்குவது ஊடகமாகும். அவ்வகையில் ஊடகங்களில் பால்நிலை என்னும் கருப்பொருளில் அமையும் இந்த ஆய்வானது - ஊடகங்களில் சித்திரிக்கப்படும் பெண்களும், ஊடகங்களில் பணிபுரியும் பெண்களும் அவர்களின் வகிபங்கும் தொடர்பாக கவனத்திற் கொள்கின்றது. மேலும், இந்த ஆய்வானது ஊடகங்கள் பால்நிலை தொடர்பான விடயங்களில் எவ்வாறான அறிக்கையிடலினை மேற்கொள்கின்றன, பால்நிலை சார்ந்த விடயதானங்கள் தொடர்பாக ஊடகங்களின் அக்கறை வெளிப்படுத்தப்படும் விதம், அவற்றின் உள்ளடக்கம் போன்றவற்றினையும் ஆராய்வதனை பிரதான நோக்கமாகக் கொண்டமைகின்றது. பால்நிலை மையக்கருத்தினை, உலகளாவியரீதியில் இயங்கும் ஊடக நிறுவனங்களுடன் ஒப்பிட்டு, இலங்கை ஊடகங்களில் பால்நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்ற ரீதியில் தகுந்த தரவுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பால்நிலையில் உள்ள ஒப்புமை மற்றும் தனித்துவத்தினைக் கண்டறிவதாக அமைவதினால் இந்த ஆய்வானது ஒப்பீட்டாய்வு மற்றும் பகுப்பாய்வினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது..

திறவுச் சொற்கள் : ஊடகம், பால்நிலை, பேசுபொருள், சமத்துவம், அறிக்கையிடல்

தற்காலத்தில் ஊடகத்துறையானது அனைத்துத் துறைகளையும் கடந்து அபரிதமானதொரு வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. ஜனநாயகத்தின் நான்கு தூண்கள் என்று பொதுவாகச் சொல்லப்படுபனவற்றில் நான்காவதாக ஊடகத்துறை குறிப்பிடப்படுகின்றது. எனவே, ஊடகங்களால் கட்டியெழுப்பப்படும் ஆரோக்கியமானதொரு சூழலே நாட்டினையும் சமூகத்தையும் ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும் என்பது உறுதியானது.

ஊடகங்கள் எனும்போது அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்கள் எனப் பலவாறாக பற்பல துறைகளில் பயணித்தாலும் அவற்றின் தொழிற்பாட்டுரீதியில் அனைத்துமே மக்கள் மயப்படுத்தப்படுவது இன்றியமையாததொன்றாகும். ஊடகம் எனும் பாது மனிதனின் அடிப்படைத் தொடர்பாடல் என்ற கருவில் தகவல்களைச் சேகரித்து அவற்றினை வெவ்வேறு வடிவில் மக்களுக்கு வழங்க பயன்படுத்தப்படும் கருவியாகவே நோக்கப்படுகின்றது. இவ்வாறான ஊடகங்களின் பிரதான தொழிற்பாடுகளாக - தகவலளித்தல், கல்வியறிவூட்டுதல், மற்றும் பொழுதுபோக்குக்காகப் பயன்படுத்துதல் என்பன அமைகின்றன. இவற்றையும் விட மக்களுக்கான கருத்துக்களைத் தோற்றுவிப்பதில், அவர்கள் தம் சார்ந்த தமது சமூகம் சார்ந்த கருத்துக்களை தோற்றுவிக்கவும் ஊடகம் பக்கபலமாக அமைகின்றது எனலாம். ஏனெனில், ஊடகங்கள் மூலம் மக்கள் தூண்டப்படுகின்றார்கள். இவ்வகையில் ஊடகம் தூண்டுதல் என்ற தொழிற்பாட்டையும் தன்னகத்தே மேற்கொண்டு வருகின்றமையைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. இத்தூ ண்டற் தொழிற்பாடானது அச்சு ஊடகங்களைக் காட்டிலும் இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களினால் அதிகமாகவே செய்யப்படுகின்றது. இவ்வாறு மக்களுக்கான கருத்தியலை விதைக்கும் சாதனமாக விளங்கும் ஓர் ஊடகம் என்பது நாகரிகமானதும் ஆரோக்கியமானதுமான பண்பாடுகளை விதைக்க வேண்டுமே தவிர, பாகுபாடுகளை மக்கள் மத்தியில் விதைப்பதில் ஈடுபடலாகாது.

இங்கு பாகுபாடு என்னும்போது - கல்வி, மதம், இனம், நிறம், எனப் பலவாறாகக் கருதப்படலாம். ஆயினும், இயற்கையை அடிப்படையாகக் கொண்டு இனப்பெருக்கம் என்ற ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆண், பெண் என்ற பாகுபாடும் அவற்றின் பால்நிலையும் ஊடகங்களில் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றது மற்றும் இப் பால்நிலையானது ஊடகச் சித்தரிப்புக்களையும் தாண்டி ஊடகம்சார் தொழிற்துறை மற்றும் கல்வித்துறையில் எவ்வாறானதொரு தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது என்பது தொடர்பில் இங்கு நோக்கலாம்.

ஊடகங்களும் பால்நிலையும் தொடர்பாகப் பேசும்போது – முதலில் நம்மிடையே பாலினம், பால் தொடர்பான புரிதல் மிகவும் அவசியமாகின்றது.

உலக சுகாதார அமைப்பின் வரையறையின்படி ''பாலினம்'' என்பது சமூகத்தில் தீர்மானிக்கப்பட்ட பங்குகளின் நடத்தை, நடவடிக்கைகள், குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொருத்தமானதாகக் கருதும் ''ஆண்பால்'' மற்றும் ''பெண்பால்'' என இரு பிரிவுகளைக் கொண்டதாக அமைகிறது.

பாலினம் அல்லது பால்நிலை என்பது சமுதாயக் கட்டமைப்பில் உருவாக்கப்பட்டது. பாலினத்திற்கு குறிப்பிட்ட பங்கு, பொறுப்புக்கள் மற்றும் நடத்தை முறைகள் உள்ளன. அது, கலாசார தனித்தன்மை வாய்ந்ததொன்றாகும். ஆனால் பால் என்பது உயிரியல் ரீதியில் சம்பந்தப்பட்டதொன்றாகும் ; இனப்பெருக்க உறுப்புக்களில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தைக் வேறுபாடுகளைக் குறிக்கின்றது ; அது இயற்கையானது மற்றும் நிலையானதொன்றாகும்.

ஊடகங்களில் பாலினப் பங்கு பரவலாக இருக்கின்றது. பெண்கள் - பாலூட்டும் தாயாகவும், மென்மையான தோற்றத்துடனும், கூட்டுணர்வுமிக்கவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவும் மனிதர்களாகவும், காட்டப்படுகிறார்கள். ஊடகங்கள் ஒப்பீட்டளவில் ஆண்களோடு ஒப்பாய்வு செய்கையில் பெண்களை மிகவும் எதிர்மறையாகக் குறிப்பிடுகின்றன. ஆண்களைக் கடின உழைப்பாளர்களாகவும், குடும்பத் தலைவர்களாகவும், அறிவைப் பகிர்பவர்களாகவும், உடலளவிலும் மனதளவிலும் பலமுள்ளவர்களாகவும் காட்டுகின்ற அதே ஊடகங்கள் பெண்களை விரும்பத்தக்க, இரக்கமுள்ள, கீழ்ப்படியுந்தன்மை கொண்ட, செயலற்ற மற்றும் பலவீனமுள்ளவர்களாக காட்டுகின்றனர். இவ்வாறான தளங்களில் வழங்கப்படும் பொறுப்புக்கள் பெரும்பாலும் ஆண்களை முதன்மையாகக் கொண்டே இடம்பெறுகின்றன.

இவ்வாறாக பால்நிலை பின்பற்றப்படுகின்ற தருணங்களில் பால்நிலைச் சமத்துவம் என்பது முக்கியமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ஆரம்பத்தில் அடக்குமுயையாக ஆரம்பிக்கப்பட்ட வன்முறையும் அதனை எதிர்த்து நடாத்தப்பட்ட போராட்டங்களும் பெண்களுக்கான சுதந்திரத்தினைப் பெற்றுக் கொடுத்தது எனலாம். இவ் அடக்குமுறையானது தாய்வழி சமூகத்திலிருந்து தந்தை வழிச் சமூகமாக மாற ஆரம்பமானதிலிருந்து பெண்கள் மீதான ஆணாதிக்கச் சமூகத்தின் அதிகாரம் ஆரம்பமாகியிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து தமிழ்ச் சமூகங்கத்திலும் பெண்கள் மீதான அடக்குமுறை, அடக்குமுறை என்ற ரீதியில் பார்க்கப்படாமல் அதனது கலாசாரமாகவே பார்க்கப்படலாயிற்று.

“விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் சொல்வீர், விடுதலை என்பீர், கருணை வெல்லமென்பீர், பெண்ணுக்கு விடுதலை நீரில்லை என்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை'' எனப் பெண்ணுக்குச் சுதந்திர வாழ்வு இல்லை என்றால் இந்த உலகில் மனிதனுக்கு வாழ்வில்லை என அன்று பாரதி கூறியது இன்று பாரியளவில் நடைபெற்றுவிட்டது எனலாம்.

ஆரம்பகாலங்களில் இலக்கியம், புராணம், இதிகாசங்களில் போற்றப்பட்ட பெண்மை மற்றும் காட்டப்பட்ட பெண்மையானது தற்போது சிறிதளவிலேனும் மாற்றம் கண்டுள்ளது. தற்காலத்தில் சுதந்திரம் மிக்கவளாகவும் அடக்கு முறைகளற்றவளாகவும் வாழப் பழகிக் கொண்டாள் பெண். ஆயினும் தொழிற்துறை, ஊடகச் சித்தரிப்பு என்று வரும்போது இவை எந்தளவில் உண்மையாகின்றன என்பதை அறியப்பட வேண்டியதாகிறது.

ஊடகங்களில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. ஊடகங்கள் பெண்களின் தனித்துவமான கண்ணோட்டத்தினை வெளிப்படுத்த வேண்டும். பொதுவாகவே பெரும்பாலான ஊடகங்களில் பெண்களைப் பிற்போக்குத்தனமாகத்தான் சித்தரிக்கின்றார்கள் ; அழகுப்பதுமையாகப் பார்க்கின்றார்கள் அல்லது மரபு ரீதியாகப் பெண்களுக்கு கொடுத்திருக்கின்ற மனைவி, தாய் போன்ற பாத்திரங்களையே கொடுக்கின்றார்கள். பெண்கள் குறிப்பிட்ட சில தொழிலுக்காக மட்டுமே படைக்கப்பட்டவர்கள் போல் அத் தொழில் வட்டத்துக்குள்ளேயே சித்தரிக்கப்படுகின்றார்கள். அதனையும் தாண்டினால் வித்தியாசமானதொரு கண்ணோட்டத்திலேயே அவர்கள் பார்க்கப்படுகின்றார்கள். அதனைவிடுத்து, இயல்பானதொரு பெண்ணாகவோ அல்லது அவளுக்கு இருக்கின்ற இயல்பான ஆசாபாசங்களுடன் ஊடகங்கள் ஒரு போதும் சித்தரிப்பதில்லை.

ஊடகங்களில் பணியாற்றக்கூடிய பெண்களின் நிலை பற்றி கருத்திற்கொண்டால் - அச்சு, இலத்திரனியல் ஊடக நிலையங்களிலும் முகாமைத்துவப் பொறுப்பினை நிறைவேற்றுபவர்களாக பெரும்பாலும் ஆண்களே உள்ளனர். உதாரணமாக, இலங்கையிலுள்ள பிரதான தமிழ் வானொலி நிலையங்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் 97 சதவீதமான முகாமைத்துவப் பதவிகளை ஆண்களே வகிக்கின்றார்கள். கட்டுப்பாட்டாளராக, நிகழ்ச்சி முகாமையாளராக, செய்தியாசிரியர்களாக, தயாரிப்பாளர்களாக, தொழில்நுட்ப அதிகாரிகளாக பெண்கள் வருவதற்கான வாய்ப்பு ஆண்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாகவே உள்ளதென ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன.

இலங்கையில் பெண்கள் தொடர்பான அநேகமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அழகுக்கலை, சமையற்கலை மற்றும் ஆடை வடிவமைப்பு போன்றன தொடர்பிலேயே ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. பெறுமானமுடைய உள்ளடக்கங்களை அதாவது அரசியல் நிகழ்ச்சியோ, நடப்பு விவகாரங்களுக்கான நிகழ்ச்சியோ அல்லது பொருளாதாரம் சம்பந்தப்பட்டவையோ அவற்றுக்கான உள்ளடக்கங்களை தயாரிப்பதிலோ, இயக்குவதிலோ பெண்களின் பங்களிப்பினைக் காணமுடியாதுள்ளது. அவ்வாறு காணப்படினும், அதுவும் மிக அரிதாகவே உள்ளது. செய்தியறைகளின் சூழ்நிலைகளை எடுத்துக் கொண்டால், செய்தி சேகரிப்பிலோ, தீர்மானம் எடுக்கும் பணியிலோ, அவற்றைத் தொகுப்பதிலோ பெண்களின் பங்கு மிகவும்

குறைவாகவே உள்ளது. ஆனால், தொகுப்பட்ட செய்திகளைப் பார்வையாளர்களுக்கு வழங்குவதிலோ அல்லது தொகுக்கப்பட்ட நிகழ்ச்சிகளை வழங்குவதாயினும் பெண் என்பவள் தற்காலங்களில் அதிகமாக தேவைப்படுகின்றாள். அந்த வகையில் தற்காலங்களில் தொலைக்காட்சி ஊடகங்களில் பெண்களின் எண்ணிக்கை மற்றைய ஊடகங்களைக் காட்டிலும் சற்று அதிகமாகக் காணப்படுகின்றது எனலாம். அவற்றில் பெண்ணினது அழகு, இனிமையான குரல், நடை, உடை, பாவனை ஆகியன செல்வாக்குச் செலுத்துகின்றன என்றால் மறுப்பதற்கில்லை. அவ்வகையில் செய்திகளை முன்வைக்கும் கடமைகளில் கடந்த 25 ஆண்டுகளில் ஊடகத்துறையில் பெண்களின் வகிபங்கு பாரியளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது எனலாம். முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தற்போது இலத்திரனியல் ஊடகங்களில் பெண் செய்தி வாசிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதற்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை. இலத்திரனியல் ஊடகங்களைப் பொறுத்தமட்டில் ஒரு அழகான பெண் அல்லது குரல் வளம் மிக்க பெண் தேவைப்படுகின்றாள். குறைந்த நேரத்தில் குறைந்த சம்பளத்தில் பெண்கள் அறிவிப்புத்துறையிலும் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

ஊழியப்படையில் அதிகளவு பெண் ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய ரஷ்யா, சுவீடன் போன்ற நாடுகளில் கூட செய்தி அறிக்கையிடும் பணிகளில் பெண்களுக்குச் சம சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை எனலாம். 1995 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஐந்து ஆண்டுக்கு ஒரு தடவையும் கணக்கெடுக்கப்பட்டு வரும் உலக ஊடக கண்காணிப்புத் திட்டம் (The Global Media Monitoring Project) ஆய்வு ஒன்றை நடாத்தி வருகின்றது. அவ்வறிக்கையின்படி 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆய்வில் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைத்துறையில் 37 சதவீதமான பெண்கள் செய்தியறிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனவும், செய்தி வாசிப்பாளர்கள் என்ற ரீதியில் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்களாக 57 சதவீதமான பெண்களும், 41 சதவீதமான பெண்கள் வானொலி செய்தி வாசிப்பாளர்களாகவும் பணியாற்றுகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதேவேளை ஆசிய நாடுகளில் 58 சதவீதமான பெண்கள் செய்தி வாசிப்பாளர்களாகவும், மத்திய கிழக்கு நாடுகளில் 57 சதவீதமான பெண்கள் செய்தி வாசிப்பாளர்களாகவும், பசுபிக் பிராந்தியங்களில் 52 வீதமான பெண்கள் செய்தி வாசிப்பாளர்களாகவும், பணியாற்றுகின்றனர் என அவ்வறிக்கை மேலும் சுட்டி நிற்கின்றது. இது தொலைக்காட்சிகளில் செய்தி தொகுப்பை விடவும் செய்தி வாசிப்புக்களுக்காக பெண்களின் எண்ணிக்கை ஆண்களுடன் ஒப்பீட்டளவில் நோக்கும்போது அதிகரித்துச் செல்வதைச் சுட்டிநிற்கின்றது.

மேலும், பெறுமானமுடைய உள்ளடக்கத் தயாரிப்புக்களுக்காக பெண்கள் நியமிக்கப்படுகின்றார்களா என்பது தொடர்பில் நோக்கும்போது 31 சதவீதமான அரசியல் நிகழ்ச்சிகளும் 39 சதவீதமான பொருளாதார நிகழ்ச்சிகளும் மட்டுமே பெண்களால் அறிக்கையிடப்படுகின்றன என உலக ஊடக கண்காணிப்புத் திட்டம் மேலும் குறிப்பிடுகின்றது. அனைத்து நாடுகளையும் உள்ளடக்கி நோக்கும் போது அரசியல், பொருளாதாரம் மற்றும் குற்றவியல் சார்பான நிகழ்ச்சிகளே மிகவும் குறைந்தளவில் பெண்களால் அறிக்கையிடப்படுகின்றன. அவ்வகையில் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த 30 சதவீதமான பெண்கள் அரசியல் செய்திகளையும், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் வட அமெரிக்காவைச் சேர்ந்த பெண்கள் 30 சதவீதம், 27 சதவீதம், 28 சதவீதம் என முறையே திகழ்கின்றனர். இந்தப் புள்ளிவிபரத் தகவல்கள் ஓர் ஆரோக்கியமான மாற்றத்தைப் பதிவு செய்துள்ளன. அத்துடன் அதிகளவான பெண்கள், பயிற்சி பெற்று ஊடகத்துறையில் இணைந்து கொள்கின்றனர் என்பதனையும் இது புலப்படுத்துகின்றது. எனினும் தயாரிப்பாளர்கள், பிரதம ஆசிரியர்கள், நிறைவேற்று அதிகாரிகள் போன்ற ஊடகத்துறையின் முக்கிய பதவிகளை வகிக்கும் பெண்களின் எண்ணிக்கையளவு அதிர்ச்சியூட்டும் வகையில் மிகச் சொற்ப அளவில் காணப்படுகின்றது. அவ்வகையில் கனடாவில் 8 சதவீதமான பெண் பிரதம ஆசிரியர்களும், 12 சதவீதமான பெண் அறிக்கையிடுபவர்களும் கடமையாற்றி வருவதாக கனேடியப் பத்திரிகை ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

விளம்பரங்களை எடுத்துக் கொண்டால் ஒரு பொருளை விற்பதற்கான இன்னொரு பொருளாகத்தான் பெண்களைப் பார்க்கின்றார்கள். சாதாரண மக்கள் அனைவருக்கும் படிக்கின்ற கல்வியை விடவும் பார்ப்பது, சொல்வது, மற்றும் வாழும் அந்த அழகான சூழல் முதலானவையே மனதின் ஆழத்தில் பதிவாகி அவற்றினை நோக்கிச் செயற்பட வைக்கின்றன. அதே போன்று தற்போது வருகின்ற தொலைக்காட்சித் தொடர்கள் அனைத்தும் பெண்களை மிகைப்படுத்தப்பட்ட உருவமாகவே காட்டுகின்றன. ஒருபக்கம் அனைத்தினையும் அனுசரித்துச் செல்கின்ற அளவுக்கு மிகவும் அப்பாவிப் பெண்ணாகவும் மறுபக்கம் அனைத்தினையும் எதிர்க்கும் கொடூரம் மிக்கவளாகவும் காட்டுகின்றன. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் ஒரு சராசரிப் பெண்ணை எந்தத் தொடராவது காட்டுகின்றதா என்றால் அது கேள்விக்குறியாகவேயுள்ளது.

இவற்றினைத் தொடர்ந்து திரைத்துறையை எடுத்து நோக்கின், ஆரம்பம் முதல் இன்று வரை அனைத்து தொழில்நுட்பம் சார் பெறுமானமுடைய வேலைகளும் ஆண்களாலேயே செய்யப்படுகின்றன. கதையாசிரியர், தயாரிப்பாளர், புகைப்படக் கலைஞர், கவிஞர் எனப் பலவாறான தொழில்வாண்மைகள் அவர்களாலேயே ஆற்றப்பட்டு, இறுதியில் நடிப்பு என்று வரும்போது அதுவும் பார்வையாளர்களைக் கவரும் நோக்குடன் கவர்ச்சிகரமான தோற்றத்தில் பெண் பயன்படுத்தப்பட்டாள் ; இன்றும் பயன்படுத்தப்படுகின்றாள். ஆயினும், தற்போது பல பெண் இயக்குனர்களும் தமது தோற்றத்தை தமக்கான வெளியில் நிலைநாட்டி வருகின்றமையை கண்கூடாக காணமுடிகின்றது. பெண்கள் மட்டும் தான் பெண்ணியம் பேச வேண்டும் என்றில்லை ஆண்களும் கூட பெண்ணியம் பேசலாம் என்பதற்கிணங்க ஆண்களுக்கு நிகராக பெண்களும் இயக்குனர், தயாரிப்பாளர் எனப் பதவிகளை வகிப்பது போன்று தமது திரைப்படங்களில் பெண்களை

முதன்மைக் கதாபாத்திரமாக கொண்டு வருவதுடன், சமூகத்தில் பெண் என்பவள் இப்படியும் மதிக்கப்படலாம் /கருதப்படலாம் என்ற கருத்தியலை விதைக்கின்றனர். இப்பாதையில் சில ஆண் இயக்குனர்களும் பெண்மையின் முதன்மையை விளக்கி சமூகத்தின் நிஜத்தை படம்பிடித்துக் காட்டிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"கல்வியில்லா பெண்கள் களர்நிலம், கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி'' என்ற பாரதிதாசனின் எண்ணத்திற்கேற்ப பெண்களுக்கு கல்வி, பேச்சு மற்றும் அடிப்படை உரிமைகள் என்று முழுமையாகக் கிடைக்கப் பெறுகிறதோ அன்றுதான் நம்நாடு முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடும் என்பதற்கிணங்க இலங்கையைப் பொறுத்தவரையில் தற்போது ஊடகத்துறை சார்ந்த கல்வியைக் கற்பதில் அதிக நாட்டமுடையவர்களாகப் பெண்கள் காணப்படுகின்றனர். இது, வரவேற்கத்தக்கதொரு விடயமாகவே கருதப்படுகின்றது. ஆனால், மறுபக்கம் தொழில்வாண்மை ரீதியில் நோக்கினால், ஊடகத்துறையில் வேலை செய்யும் பெண்கள் ஒப்பீட்டளவில் ஆண்களை விட குறைவாகவே உள்ளார்கள். இது மிகவும் வருந்தத்தக்கதொரு விடயமாகும். ஊடகக் கல்வியை வழங்கும் உயர் கல்வி நிறுவனங்களாக இலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம், கொழும்புப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம் என்பன திகழ்கின்றன. இவற்றினை விடவும் ஊவா வெலஸ்ஸ பல்கலைக்கழகத்தில் புதிதாக ஊடகக் கற்கைகள் எனும் பகுதி ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வியைத் தொடரும் மாணவர்களை நோக்கும்போது ஒப்பீட்டளவில் பெண்களே மிக அதிகமாக உள்ளனர். ஆனால், தொழில்துறையில் அதாவது கல்வியை முடித்துக் கொண்டு ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையில் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகவும் ஒப்பீட்டளவில் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவேயுள்ளது.

இத்தருணத்தில் தனித்தே நிறுவனங்கள் மீது மட்டும் குற்றஞ்சாட்ட முடியாதுள்ளது. ஏனெனில் ஒரு பெண் என்பவள் குறிப்பிட்டதொரு தொழிலை தேர்வு செய்வதாயின் அதனை தீர்மானிக்கும் காரணிகள் பலவாகவுள்ளன. குடும்பம், கலாசாரம், பாதுகாப்பு கடந்தகால அச்சுறுத்தல்கள் மற்றும் ஊடகம் தொடர்பில் மரபு சார்ந்த பார்வை என்ற பல காரணிகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுக்கும் தடையாக அமைகின்றன. இன்றைய ஊடகத்துறையை எடுத்துக்கொண்டால் எல்லோருக்கும் சமமாகத்தான் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. ஆனால் ஒரு சில பொறுப்புகளைப் பெண்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வெகுதூரங்களுக்குத் தனியாகச் சென்று தங்குவதற்கு எல்லாப் பெண்களும் துணிந்து முன்வருவதில்லை, வெளியிடங்களுக்குச் சென்று தகவல் சேகரிப்பில் அனைத்து பெண்களும் ஆர்வம் காட்டுவதில்லை. இவ்வாறான சில காரணங்களினால் அனைத்துப் பெண்களுக்குமான சார்புப் படம் வரையப்பட்டு விடுகிறது. இக்கருத்தினை மாற்றுவதென்பது மிகவும் கடினமானதொரு விடயமாகவே காணப்பட்டு வருகின்றது.

அடுத்து தலைமைத்துவம் எனும்போது ஆண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் சமூகம் பெண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறு ஏற்பினும் தலைமைத்துவத் தீர்மானங்களை ஏற்கத் தயங்குகின்றன. பெண் என்பவள் மென்மையானவள், கீழ்படிந்து நடக்கவேண்டியவள் என்றே வாழ்க்கை முறை காட்டிநிற்கின்றது. அதிகாரம் எனும்போது ஆட்களை அடக்குவது என்றில்லை, துறைசார் அறிவைப்பெற்று அதனை தகுந்த முறையில் செயன்முறைப்படுத்தத் தெரிந்திருப்பதுவே எனவே அவ் அதிகார செயன்முறை பெண்களாலும் கொண்டு செல்ல இயலும் என்பதை ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் மனதில் கொள்ள வேண்டும்.

இவ்வாறே பாலினச் சிறுபான்மையினரான மூன்றாம் பாலினத்தவர் தொடர்பிலும் ஒவ்வொரு ஊடகமும், சமூகமும் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களும் நம்முள் ஒருவர் தானெனக் கருத்திற் கொண்டு அவர்களுக்கான இடத்தினை வழங்குவதற்கு முன்வரவேண்டும். இதன் மூலம் ஆரோக்கியமானதொரு சமூகத்தினையும் ஊடகத்தினையும் கட்டியெழுப்ப முடியும் என்பதில் ஐயமில்லை.

சமூகத்தின் கருத்தியலைத் தீர்மானிப்பதில் ஊடகம் மிகவும் இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. எனவே, ஆக்கபூர்வமான கருத்துக்களை உருவாக்க வேண்டுமாயின் பெண்களுக்கும் புதியதும் ஏற்றதுமான பதவிகளையும் சந்தர்ப்பங்களையும் வழங்குவதில் தவறில்லை. ஏனெனில், ஆண்கள் தமது தயாரிப்புக்களினூடாக அனைத்தினையும் வெளிக் கொணர்ந்தாலும் பெண்கள் பல வகையான பேசாப்பொருட்களை தமக்கேயுரிய விதத்தில் ஆண்களே எதிர்பாராத விதத்தில் வெளிக் கொணர்வதைத் தற்காலத்தில் நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது. எனவே, அவர்கள் விசேடமாகக் கவனம் செலுத்துகின்ற விடயங்களில் புதிய பல அணுகுமுறைகளைக் கையாண்டு புதிய படைப்பாக்கமாக கொண்டு வருவதனைக் காணமுடிகின்றது. தற்காலத்தில் பெண்களின் ஊடகப் பிரவேசம் அதிகமாக காணப்படுகின்றமை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், இவ்வளர்ச்சி மேலும் தொடரவேண்டுமென்பதே பேராவாவாக உள்ளது.

உசாத்துணை :


- Ross, K. (ed.) & Byerly, M., (ed.) (2006) Women and Media : International Perspectives, Blackwell Publishers, Australia
- 'The Global Media Monitoring Project 2015', World Association for Christian Communication, GMMP
- சௌந்தர்ராஜன், எம்., (2016) இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை 600 097, இந்தியா